செய்தி வெளியீடு: 431 நாள்: 27.5.2010

**28.3.2010 முதல் மின்சாரத் தேவை மிகவும் அதிகமாக ஆகிவிட்டதாலும், காற்றாலை மூலம் கிடைத்து வந்த மின் உற்பத்தி, தட்பவெப்ப நிலை காரணமாக முழுமையாக நின்றுவிட்டதாலும், சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 24 மணி நேரம் மின்சாரமும், நம் மாநிலத்தின் மற்ற இடங்களில் 21 மணிநேரமும் மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல உயர்அழுத்த மின்சாரத்தை உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 20 சதவீதம் என்று இருந்த மின்வெட்டு 30 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.**

**கடந்த சில நாட்களில் காற்றாலை மூலம் கிடைக்கக்கூடிய மின்உற்பத்தி மீண்டும் தொடங்கி, தற்சமயம் அதிகரித்து வந்ததைக் கருத்தில்கொண்டு, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்கனவே வழங்கப்பட்டதைப் போல 24 மணிநேர மின்சாரமும், தமிழ்நாட்டின் மற்ற இடங்களில் 3 மணிநேரம் இருந்த மின்தடை 2 மணிநேரமாக இன்றுமுதல் குறைத்து 22 மணிநேர மின்சாரம் வழங்கவும், உயர்அழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் தொழிற்சாலைகளுக்கு 30 சதவீதம் என்றிருந்த மின்தடை, இன்றிலிருந்து 20 சதவீதமாகக் குறைத்து அதிக மின்சாரத்தை வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (27.5.2010) ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் உடனடியாக இந்த ஆணையைச் செயல்படுத்தும்.**

*****

வெளியீடு:

இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை—9.